# இந்துசமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் முக்கிய திருவிழாக்கள் நாட்காட்டி (Calender of Events) (4/2017 )

| வ. எண். | திருக்கோயிலின் பெயர் மற்றும் தல வரலாறு/ அமைவிடம் சுருக்கமாக | முக்கிய திருவிழாக்கள் மாதம் வாரியாக | திருவிழாக்களின் முக்கிய நிகழ்வுகள் தேதி வாரியாக | திருவிழாவின் சிறப்புகள் சுருக்கமாக | தொலைபேசி எண்கள் | Website & E-Mail I.D. |
|---|---|---|---|---|---|---|
| 1. | அருள்மிகு **சுப்பிரமணியசுவாமி** திருக்கோயில், சிவன்மலை, காங்கயம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.<br>*******<br>**ஸ்தல வரலாறு**<br>காங்கய நாட்டுக்குரிய பொது மலையாக சிவன்மலை உள்ளது. கொங்கு நாட்டுக் குன்று தோறாடல் தலங்களில் சிறந்தது சிவன்மலை. சமயப் பெருமையும், இலக்கியச் சிறப்பும், புராணப்புகழும் உடையது. சிவன்மலை சிறுமலையாக இருந்தாலும், சிறப்புமிக்கது. சிவவாக்கியம் என்ற சமய நூலை இயற்றிய சிவஞானியும் சித்தருமாகிய சிவவாக்கியர் அமைத்த கோயில் என்பது ஐதீகம் சிவவாக்கியர் முருகன் அருளும் உபதேசமும் பெற்ற ஒரு மகான் ஆவார். சிவன்மலை சிவவாக்கியரோடு தொடர்புடையது.<br>மலையைச் சுற்றிலும் அட்ட துர்க்கை இருப்பதாகக் கூறுவர்.<br>496 படிகள் சிவன்மலையில் உள்ளன.<br>**திருக்கோயில் சிறப்பு**<br>இத்திருக்கோயில் பொருள் வைத்து பூஜை செய்தல் என்பது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.சிவன்மலை ஆண்டவர் சேவார்த்திகளின் கனவில் தோன்றி குறிப்பால் உணர்த்தி அது சம்பந்தமான பொருட்களை உத்தரவு பெட்டியில் வைப்பதென்பது இத்திருக்கோயிலில் தொன்று தொட்டு நடைபெற்று வருவது வழக்கத்திலிருந்து வருகிறது. தற்போது 29.08.2016 அன்று பூ மாலை வைத்து பூஜை செய்யப்பட்டு வருகிறது.<br>**அமைவிடம்**<br>திருப்பூர் மாவட்டத்தில், காங்கயம் வட்டத்தில், காங்கயம்–திருப்பூர் சாலையில் 4–வது கிலோ மீட்டர் தொலைவில் சிவன்மலை உள்ளது | சித்திரை முதல் நாள் (14.04.2017)<br><br>சித்ரா பௌர்ணமி (10.05.2017)<br><br>வைகாசி விசாகம் (07.05.2017) | பஞ்சாங்கம் வாசித்தல். சுவாமி புறப்பாடு நடைபெறும்.<br><br>அன்று இரவு ஏராளமாக பக்தர்கள் பௌர்ணமி கிரிவலம் வருவது சிறப்பு.<br><br>சுவாமி புறப்பாடு நடைபெறும். | இத்திருக்கோயிலில் புதிய பஞ்சாங்கம் கொண்டு வருட பலன்கள் அதிகாலை வாசிக்கப்படும்.<br><br>சுவாமிக்கு சிறப்பு அலங்காரம், அபிஷேகம் நடைபெறும்.<br><br>இத்திருக்கோயிலில் பக்தர்களால் காவடிகள் அபிஷேகம் செய்யப்படும். உற்சவர் புறப்பாடு நடைபெறும். | **அலுவலகம்**<br>04257–220680<br><br>**மலைக்கோயில் அலுவலகம்** ..<br>04257–220630 | **WEBSITE**<br>www.sivanmalaimurugan.tnhrce.in<br><br>**E-Mail**<br>www.sivanmalaitemple@tnhrce.org |